RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt2224s22238

OPEN ACCESS

# சமூகவியல் நோக்கில் சங்ககால மருதநிலமக்களின் வாழ்வியல்

சு. கொமரசாமி [அ, *], மு. கவிதா [அ]

[அ] தமிழ்த்துறை, ஈரோடு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, ஈரோடு-638009, தமிழ்நாடு, இந்தியா

# A Sociological Perspective about Marutham Regional People

S. Kumarasamy [a, *], M. Kavitha [a]

[a] Department of Tamil, Erode Arts and Science College, Erode-638009, Tamil Nadu, India

* Corresponding Author: kumarasamysambath@gmail.com

Received: 27-09-2022
Revised: 23-10-2022
Accepted: 20-11-2022
Published: 10-12-2022

**ABSTRACT**

When we closely approach the lifestyle of the people of the Sangam period, the people of that time have their own lifestyles and occupations according to the backgrounds of five landforms Kurinji, Mullai, Marutham, Neithal and Paalai. The lifestyle and culture of the people of these five lands have the common elements of the people of the Sangam period, but when we approach these subtly, it is possible to know that each land's people operate with their own unique lifestyle norms, social structure, and cultural elements. The people of Marutham land, who know the occupation of plowing, do not know occupations like robbery and murder that was followed by Paalai land people. The people of the Nellai land who caught fish in the sea do not know the professions like rice paddy and weeding. Each land people have their own unique land identity, occupation, lifestyle, worship, ritual, customs, food, dress, clothing, etc. The hypothesis of this article is to examine the life style of Marutham land people as described in Ettuthogai anthology take the way of life of the people of Marudham lands and describes about the high cultural thoughts of Tamil people.

**Keywords:** Marudham Lands, Sangam Literature, Sangam Period, Social Structure

## முன்னுரை

சங்க கால மக்களின் வாழ்வியலை உற்றுநோக்கி அணுகும்போது அக்கால மக்கள் தங்களது வாழ்க்கைத் தளங்களை குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலையென பின்புலங்களுக்குத் தக்கவாறு தங்களது வாழ்க்கை முறைகளையும் தொழிலையும் அமைத்துக் கொண்டு வாழ்ந்து இருப்பது புலன் ஆகின்றது. இவ்வைந்து நில மக்களின் வாழ்வியலும் பண்பாடும் சங்ககால மக்களின் பொதுவான கூறுகளைப் பெற்று இருப்பினும் இவற்றை நுட்பமாக அணுகும்போது ஒவ்வொரு நில மக்களும் ஒவ்வொரு வகையாக தங்களுக்கு என்று தனித்தன்மைகள் கொண்ட வாழ்வியல் நெறிமுறைகளையும் சமூகக் கட்டமைப்பினையும், பண்பாட்டுக் கூறுகளையும் கொண்டு இயங்குவதை அறிய முடிகின்றது. உழவுத் தொழில் தெரிந்த மருத நில மக்களுக்குப் பாலை நிலத்தின் ஆறலைக் கள்வர்களைப் போல கொள்ளையடித்தல், கொலை செய்தல், வழிப்பறி போன்ற தொழில்கள் தெரியாது. கடலில் மீன் பிடித்த நெய்தல் நில மக்களுக்கு நெல்லரிதல், களைபறித்தல் போன்ற தொழில்கள் தெரியாது.

ஒவ்வொரு நில மக்களும் தங்களுக்கு என்று தனித்த நில அடையாளம், தொழில், வாழ்க்கைமுறை, வழிபாடு, சடங்கு, பழக்கவழக்கங்கள், உணவு, உடை, அணிகலன், வாழ்வியல்முறை

உள்ளிட்ட பல்வேறு பண்பாட்டுக் கூறுகளால் எவ்வாறு பிறநில மக்களின் வாழ்வியல் நிலைப்பாடுகள் எத்தகையன? என்பதையும் அறிய முயலுவதே இவ்வாய்வு முயற்சியின் தலையாய நோக்கம் ஆகும்.

சங்க இலக்கியங்களில் குறிப்பாக எட்டுத்தொகை நூல்களில் காணலாகும் மருதநில மக்களின் வாழ்க்கை முறையையும், உலக வாழ்வியல் சார்ந்த தமிழரின் உயரிய பண்பாட்டுச் சிந்தனைகளையும் எடுத்தாய்வது இக்கட்டுரையின் கருதுகோளாகும்.

## பயன்பாடு

ஒரு நில மக்களின் வாழ்வியலையும் பண்பாட்டுக் கூறுகளையும் முழுமையாகக் கண்டறிந்து வெளிப்படுத்தும் விதமாக மருதநில மக்கள் பற்றிய செய்திகளை எடுத்துரைப்பதாக அமைகின்றது. புற நானில மக்களின் வாழ்வியலையும் பண்பாட்டுக் கூறுகளையும் தனித்தனியாக ஆராய்ந்து அவற்றைத் தொகுத்து தமிழர் பண்பாட்டின் பொதுக்கூறுகளையும், தனிச் சிறப்புத் தன்மைகளையும் முழுமையாக வெளிப்படுத்துவதற்கு இவ்வாய்வு பயன் உடையதாக அமைகின்றது.

## மருத நிலத்துக்குரிய முதற்பொருள், உரிப்பொருள்

நிலம்-வயலும் - வயல்சார்ந்த இடமும்

சிறுபொழுது - வைகறை

பெரும்பொழுது - கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில்

உரிப்பொருள் - ஊடலும் ஊடல் நிமித்தமும்.

## மருதநிலம் பற்றிய வரலாறு

மருதநிலமே உலக நாகரீகங்கள் தோன்றிய இடமாக கருத இயலும். வயலும் வயல் சார்ந்த இடம் (அ) நன்னீர் சூலக மண்டலமே மருதநிலம் ஆகும். குறிஞ்சி நிலத்தில் அருவியாகி முல்லை நிலத்தில் காட்டாறாகி, மருத நிலத்தில் தான் அமைதியாகி மக்கள் பெரும்பயன் பெறும் வகையில் நீரானது அமைகின்றது. இத்தகைய சிறப்புமிக்க மருத நிலத்தில் உயிர்களன் இருப்பை இயற்கை சூழலே முடிவு செய்கின்றது. மருத நில மக்களாகிய உழவர், உழத்தியர் வாழ்க்கையில் நிகழும் நிகழ்ச்சிகளை எளிய நடையில் நயம்பட வெளிப்படுத்தும் விதமாக எட்டுத்தொகை மருதத்திணைப் பாடல்கள் அமைந்துள்ளன.

இப்பகுதியுடன் தொடர்புடைய மரமான மருத மரத்தின் பூவினை வைத்தே இந்தத் திணைக்கும் பெயரிட்டனர் நம் முன்னோர்கள். குறிஞ்சி கரடு முரடானது வாழ்வதற்கு ஏற்ற சூழல் இல்லாதது, பசியைப் போக்கிக் கொள்ள காய்களும் கனிகளும் அல்லது வேட்டையாடிய விலங்கின் இறைச்சி மட்டுமே கிடைத்தது. மழை இயற்கை பாதிப்புகள் அதிகம் காத்துக்கொள்ள வசதிகள் குறைவு. முல்லை நிலத்தில் சமமான நிலப்பரப்பு குறைவு. தாம் பழக்கிய ஆடு, மாடுகளுக்குப் புல்வெளிகள் உண்டு. கூடாரம் அமைத்துக் கொள்ள முடியும்.

### மருத நிலத்தின் சிறப்புகள்

சங்கப் புலவர்கள் தரும் வருணனையினின்று மருதநிலத்தை ஆறு அடிப்படை பகுதிகளாகப் பிரித்துக் காட்டுவர் அவை

1. பண்படுத்தப்பட்ட விளைநிலமாக அமையும் கழனி
2. வயல்புலத்தை அடுத்துஅமையும், நீர் தேங்கும் பழனம்
3. ஓடும் நீரைக் காட்டும் ஆறு

4. நீர் தங்கும் பொய்கை எனும் நீர்நிலைகள்
5. மரம், செடி, கொடிகள் அடர்ந்த பொழில்
6. மக்கள் வாழும் ஊர்

மருத நிலம் இயற்கை வளத்தையும் அதன் அழகையும் சிறப்பாக சுட்டிக் காட்டுகிறது. "உழவு உலகிற்கு அச்சாணி" என்று வள்ளுவரும், உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்! என்று பாரதியாரும் மருதநிலம் சார்ந்த உழவுத் தொழிலை சிறப்பித்துக் கூறி உள்ளனர். சங்க இலக்கியமான கலித்தொகையில் மருதநில மக்களின் வீர விளையாட்டன ஏறு தழுவுதல் பற்றிய செய்திகளை காண முடிகின்றது.

"எழுந்தது துகள்

ஏற்றனர் மார்பு

கவிழ்ந்தன மருப்பு

கலங்கினர் பலர்" (Parimanam & Balasubramaniyam, 2004)

என்று முல்லைக்கலியில் ஏறு தழுவுதலையும், களத்தில் வீரர்ளின் செயல்களை விளக்கும் விதமாக களம் குறித்த பாடல் வரிகள் அக்காட்சியை நம் கண் முன்னே நிறுத்துகின்றன.

"நீறு எடுப்பவை நிலம் சாடுபவை

மாறு ஏற்றுச் சிலைப்பவை மண்டிப் பாய் பாவையாய்

துளங்கு இமில் நல் ஏற்றினம் பவ களம் புகும்

மள்ளர் வனப்பு ஒத்தன" (Parimanam & Balasubramaniyam, 2004)

என்றவாறு கலித்தொகையானது காளைகளின் 'பாய்ச்சலை' எடுத்துரைக்கிறது.

## மருதநில மக்களின் குடும்ப அமைப்பு

சங்க இலக்கியத்தில் "குடும்பை, குடும்பு, கடும்பு" ஆகிய சொற்கள் குடும்ப அமைப்போடு தொடர்பு உடையவை. குடும்ப அமைப்பு ஏற்படுவதற்க அடிப்படை திருமணமே. திருமணம், குடும்பம் இரண்டும் ஒன்றையொன்று சார்ந்து செயல்படுகின்றன. நாணயத்தின் இரண்டு பக்கங்களைப் போல இன்று நாம் வழங்கும் திருமணம், குடும்பம் ஆகிய இரண்டு சொற்களும் தொல்காப்பியத்திலும், சங்க இலக்கியங்களிலும் இடம் பெறவில்லை.

குடும்பம் என்ற அமைப்பு ஏற்படப் பன்னெடுங்காலம் ஆகியிருக்கலாம். இந்த உயரிய அமைப்பின் மூலம் உலகச் சமூகம் இயங்குகிறது. சங்க காலத்தில் குடும்ப அமைப்பு மேலோங்கிய ஒன்றாக இருந்தது. அதன் தொடர்ச்சி இன்று வரை இருக்கிறது. மருதத்திணைப் பாடல் 'மகளிர் தம்மனை, நும்மனை' (அகம்.346 :16-17) என மனைவியின் இல்லத்தையும் கணவரின் இல்லத்தையும் பிரித்துப் பேசும் போக்கினைக் காண முடிகிறது (Venkatasamy Nattar, 2012).

## தாய்வழிக் குடும்ப அமைப்பு

தாய் வழியாகவே குலத் தொடர்ச்சி குறிக்கப்பட்டது குறித்து பதிற்றுப்பத்து கூறும் சேர நாட்டு மருமக்கள் தாய முறை இதற்கு சிறந்த எடுத்துக்காட்டு ஆகும். (இன்றைய கேரள மாநிலமாம் அந்நாளைய சேர நாட்டில் ஆண் மக்கள் தம் தந்தையர்க்கு புதல்வராக அமைந்தாலும் அவருக்கின்றி, அத்தந்தையாரின் உடன் பிறந்தாள் புதல்வர்க்கே அச்சொத்து உரிமையுடையதாகும். இதுவே 'மருமக்கள் தாய முறை' எனப்பட்டது.)

"சிறுவர் தாயே பெரிற் பெண்டே (புறம்- 270)

செம்முது பெண்டின் காதலஞ்சிறா அன் (புறம்- 277)

முளரி மருங்கின் முதியோள் சிறுவன் (புறம்- 278)

என்மகன் ஒருத்தியும் பிறர்மகன் ஒருவனும்" (கலித்தொகை -பாலை-8)

இத்தொடர்களில் இவளது மகன் என்றே கூறப்பட்டது (Avvai Duraisamy Pillai, 1968). இவனது மகன் கூறப்படவில்லை. இதிலிருந்து சங்க காலத்தின் தாய் வழிச் சமூக நிலையை அறியலாம். இல்லற வாழ்வில் மனைவியே கணவன் பெருமைக்கு ஆதாரம்: அதுபோல கணவனனே மனைவியின் பெருமைக்கு ஆதாரம் எனப் பொருள் படும்படி

"மனைக்கு வரம்பாகிய வாணுதல் கணவன்

முனைக்கு வரம்பாகிய வென்வேல் நெடுந்தகை" (புறம்- பா-314)

எனும் பாடல் அடிகளில் ஐயூர் முடவனார் பொருள் பதியப் பாடியுள்ளார். குடும்பச் சொத்தும், செல்வங்களும் பெண்களுக்குச் சென்று சேர்ந்தன என்பதை குறுந்தொகை மருதத்திணைப் பாடல் 295 தெளிவாக விளக்குகிறது.

## தந்தைவழிக் குடும்ப அமைப்பு

மனித குலத்தில் ஆதியில் தோன்றி வளர்ந்த தாய்வழி முறையானது இருந்தாலும் சங்க காலத்திலேயே ஆண் மையச் சமூக முறை வலுவாக வேர் ஊன்றிப் பரவலாகி விட்டதைக் காண முடிகின்றது. திருமணத்திற்கு பின் தன் கணவனுடைய தந்தையகத்தில் பெண் வாழ வேண்டும் என்பதை ஐங்குறுநூறில் மணமான பின் தலைவன் தலைவியை அவனுடைய இல்லத்திற்கு அழைத்து வந்து அவனுடைய தாய் அவளுக்கு 'சிலம்பு கழி நோன்பு' செய்தாள் என்பதை

"நும்மனைச் சிலம்பு கழீஇ அயரினும்

எம்மனை வதுவை நல்மணம் கழிக" (Sadasiva Iyer, 1999)

இதன் வழி அறியலாம். "மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிரே" (குறுந்தொகை-135) பாடல் மூலம் பெண் தன் கணவனைச் சார்ந்திருந்த நிலையை அறிய முடிகிறது. சங்க காலத்தில் தந்தை வழிக் குடும்ப முறையானது மிகவும் வலுவான முறையாக இருந்துள்ளதைப் பொருள் வயிற் பிரிவு, போர், வாழ்வியல் சடங்குகள், குடும்பம், திருமணம் எனப் பல்வேறு சமூகக் களங்களில் காண இயலும்.

## மருத நில மக்களின் உணவுகள்

மருதம் (வயலும் வயல் சார்ந்த இடம்) ஆதலால் மக்கள் செந்நெல், கரும்பு, வெண்ணெலரிசியை உணவாக அதிகம் உண்டனர். இந்நில மக்களின் நெல் வகைகளாக குறிப்பிடப்படுவன

| | | |
|---|---|---|
| 1.பைங்குழலாள் | 2. சீதாபோகம் | 3.ரங்கஞசம்பா |
| 4.மணல்வாரி | 5. ஆதிக்கிராதி | 6.அரிக்ராவி |
| 7.முத்துவெள்ளை | 8.புழுகுசம்பா | 9.சொரிகுரம்பை |
| 10.புத்தன்வாரி | 11.சிறைமீட்டான் | 12.பூம்பாளை |
| 13.குற்றாலன் | 14.பாற்கடுக்கன் | 15.கற்பூரப்பாளை |
| 16.காடைகழுத்தன் | 17.மிளகு சம்பா | 18.பனைமுகத்தன் |

வேளாண்மைத் தொழிலில் நிலத்தை பண்படுத்துவதற்கு பயன்பட்ட கருவிகள் உழவுக் கருவிகள் ஆகும். சங்க காலத்தில் விலங்குகளின் துணையோடு கலப்பை, தளம்பு, கொழு முதலிய கருவிகளும் பயன்படுத்தப்பட்டன. உழவுக்கு முதன்மையானது கலப்பை. இக்கலப்பையானது சங்க இலக்கியங்களில் ஏர், உழுபடை, நாஞ்சில் எனப் பல பெயர்களில் அழைக்கப்படுகிறது. ஆழ உழவு, பலசால் உழவு

போன்றவற்றை பயன்படுத்தி விதைத்தல், பயிர் இடைவெளி, நீர்ப்பாசன முறைகளையும் கடைபிடித்து வேளாண்மையை பெருக்கினர். பல்வேறு பயிர் பாதுகாப்பு உத்திகளான நெருப்பிடல், பொறி வைத்தல், வலை விரித்தல், உள்ளிட்ட உத்திகளையும் பயன்படுத்தினர். நன்செய் நிலமாகிய வயலில் பயிரிடப்பட்ட நெல், கரும்பு முதலிய பயிர்களை அறுவடைக்குரிய பதமடைந்தவுடன் அறுவடை செய்தனர் என்பதை

"காலம் அன்றியும் கரும்பு அறிந்து ஒழியர்து" (பதிற்றுப்பத்து.20)

எனும் வரிகள் காட்டுகிறது. "மருதநில நெல் வகைகளை எண்ணினாலும், பள்ளு வகைகளை எண்ண முடியாது" என்றொரு முதுமொழி மருத நில மக்களின் உணவுச் சிறப்பினை எடுத்துரைக்கிறது. சோற்றை மிதவை என அழைத்தனர். உழுந்து, அவரை முதலிய பருப்பு வகைகளுடன் நெய்யையும் கலந்து விருந்து படைக்கும் முறைமையை மருதப் பாடல்களின் வழி அறிகிறோம். புளிச்சோற்றில் பசுவின் வெண்ணெய்யை உருக்கி இட்டு உண்டனர் என்பதையும் அறிகிறோம்.

"உழுந்து தலைப்பெய்த கொழுங்களி மிதவை

பெருஞ்சோற்று அமலை" (அகநானூறு. 86)

மைப்பு அறப் புழுங்கின் நெய்களி வெண்சோறு" (அகநானூறு. 136)

வெஞ்சோறு

தீம்புளிப் பரம்பின் திரள்கனிபெய்து

விடியல் வைகறை இடும் ஊர" (அகநானூறு. 196)

என வரும் தொடர்களால் பண்டைய மருத நில மக்களின் உணவுப் பழக்கத்தை அறிகிறோம் (Venkatasamy Nattar, 2012).

## மருதநில மக்களின் சமய நம்பிக்கை

தொல்காப்பியம் மருதநில கடவுளாக ('வேந்தன் மேய தீம்புனல் உலகமும்') வேந்தனைக் கூறுகிறது. பிற்காலத்தார் இந்திரனை மருதநிலக் கடவுளாக கூறுவர். சங்க காலத்தில் தமிழகம் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஐவகை நிலங்களாக பகுக்கப்பட்டு, ஒவ்வொரு நிலத்திற்கும் வழிபடு தெய்வங்களும், திருவிழாக்களும் சிறப்பான முறையில் அமைந்திருந்தன. அந்த வகையில் மருத நில தெய்வமாகிய இந்திரனுக்கான விழாவாக இந்திர விழா நடைபெற்றது. தூங்கெயிலெறிந்த தொடித்தோள் செம்பியன் என்ற சோழ மன்னன் இவ்விழாவினை தொடங்கி வைத்தான். சிலப்பதிகாரம், மணிமேகலை காலங்களில் இவ்விழாவானது அரசாங்க விழாவாகவே கொண்டாடப்பட்டது. சமய ஒற்றுமையை வலியுறுத்தும் விழாவாக இது அமைந்திருந்தது.

பசி, பிணி, பகை முதலியவற்றால் துன்பம் அடையாது இருத்தல் பொருட்டுத் தெய்வத்தைக் கருதிச் செய்யும் சாந்திப் பெருவிழாவே இந்திர விழாவாகும். இவ்விழாவைத் தீவகச் சாந்தி செய்தரு நன்னாள் என்று சாத்தனார் கூறுகின்றார். 'நாளேழ் நாளினு நன்கறிந்தீர்' என்ற மணிமேகலைத் தொடரின் மூலம் இவ்விழாவானது இருபத்து எட்டு நாட்கள் சிறப்பாக நடைபெற்றது என்பதை அறியலாம். இதனை விருந்தாட்டு விழா என்றும் குறிப்பிடுவதால் ஆண்டுதோறும் கொண்டாடப்படும் விழா என்றும் பொருள் கொள்ளலாம்.

புகார் நகரிலும், மதுரையிலும் இந்திர விழா நடைபெற்றதாகச் 'சின்னமனூர் செப்பேடுகள்' தெரிவிக்கிறது. சித்ரா பௌர்ணமி நாளில் பூம்புகார் மற்றும் அதனைச் சுற்றியுள்ள ஊர்களில் இருந்து வரும் மக்கள், கடற்கரை மணலில் அமர்ந்து, முழுநிலவு வெளிச்சத்தில் தாங்கள் கொண்டு வரும் உணவை உண்பது வழக்கம். மனஅமைதிக்காகவும், ஒற்றுமைக்காகவும் இவ்விழாவானது தற்காலத்தில் நடத்தப்பட்டு வருகிறது.

## சடங்குகளும் நம்பிக்கைகளும்

ஆதி காலத்தில் பல்வேறு வகையான சடங்குகளையும், நம்பிக்கைகளையும் மக்கள் கொண்டிருந்தனர். அவற்றில் ஒருசிலவற்றை இங்கு காணலாம். 1. மழைச் சடங்கு, 2. விதைப்புச் சடங்கு, 3. மணச் சடங்கு, 4. ஈமச் சடங்கு.

மருதநில மக்களின் மழைச் சடங்கினை பரிபாடல் கூறுகிறது (பரி. 10. 85-86) சங்கு, நண்டு, இறவு, வாளை போன்றவற்றைக் கையால் பிடித்து நீரில் இடுதல் மழைச் சடங்காகும். திருமுருகாற்றுப்படை விதைப்புச் சடங்கு பற்றிய செய்திகளை எடுத்துரைக்கிறது. அகநானூற்றில் இடம்பெற்றுள்ள 86 ஆம் பாடலும், 136 ஆம் பாடலும் தமிழக மக்களிடையே நிலவிய மணச்சடங்குகள் பற்றி ஓரளவு அறியத் தருகின்றன. அருகம்புல்லின் கருமையான கிழங்கிலுள்ள முகையை வெண்மையான நூலில் கட்டிப் பெண்ணிற்கு திருமணத்தன்று அணிவிப்பர். திருமணம் நிலைபேறானதாக இருக்க வேண்டும் என்பதற்காக இவ்வாறு அணிவிக்கப்பட்டது. இன்றும் திருமண நாளில் மணமக்களை,

"ஆல்போல் தழைத்து அருகுபோல் வேரூன்றி

மூங்கில்போல் சுற்றம் முசியாமல் வாழ்ந்திருக்க"

என வாழ்த்துவது இங்கு குறிப்பிடத்தக்கது. ஆண் குழந்தைகளுக்குத் தான் பெற்றோர்க்கு ஈமக்கடன் செய்து பிதிர்கடன் நிறைவேற்றும் தகுதி உண்டு என்பதை அகநானூற்றுப் பாடல்

"இம்மை உலகத்து இசையொடும் விளங்கி

மறுமை உலகமும் மறுஇன்று எய்துப

செறுநரும் விழையும் செயிர்நீர் காட்சிச்

சிறுவர்ப் பயந்த செம்மலோர்" (Venkatasamy Nattar, 2012)

விளக்குகிறது. இன்றும்கூட ஈமச்சடங்கு செய்யும் உரிமை மகனுக்கே உள்ளதால் புதல்வனைப் பெற்றவர்களே இம்மை மறுமை என இரு உலகத்திலும் சிறப்படைவர் என்ற நம்பிக்கை வலியுறுத்தப்படுகிறது.

## மருதப் பாடல்களில் பரத்தமை

மருதப் பாடலின் உரிப்பொருள் ஊடலும் ஊடல் நிமித்தமும் ஆகும். தலைவனின் பரத்தமை காரணமாகவன்றி வேறு எவற்றின் காரணமாகவும் ஊடல் நிகழ்ந்ததாக அக இலக்கியங்களில் சான்றுகள் இல்லை. அகநானூற்றின் மருதப்பாடல்கள் நாற்பதில் தலைவி கூற்றாக அமைந்த பாடலகள் 11, தலைவன் கூற்றாக அமைந்தது 3, தோழி கூற்றாக அமைந்த பாடல்கள் 17, பரத்தைமை கூற்றாக அமைந்தவை 09, இவற்றில் தலைவன் கூற்றாக அமைந்த 3 பாடல்களை தவிர்த்து மற்ற அனைத்திலும் தலைவனின் பரத்தமை ஒழுக்கமே பேசப்படுகிறது. மருதத்திணைப் பாடல்களில் முதன்மை பெறுபவர் நால்வர். இவர்களில் தலைவன், தலைவி, தோழி ஆகிய மூவரும் பிற திணைகளுக்கும் உரியர்களாயிருக்கப் பரத்தை மருதத்திணைக்கு உரிய சிறப்பு பாத்திரமாக இருத்தலைக காண்கிறோம்.

காலம் காலமாகவே உழைக்கும் எளிய மக்கள் ஒரு பிரிவாகவும், உழைப்பை அனுபவிக்கும் மேட்டுக்குடி மக்கள் ஒரு பிரிவாகவும்வாழ்ந்த வந்திருத்தலைச் சங்க இலக்கியங்களில் பரவலாகக் காண்கிறோம். தொல்காப்பியரே உழைக்கும் எளிய மக்களைக் குலமக்களாகவும், மேட்டுக்குடி மக்களைத் தலைமக்களாகவும் கொண்டு சூத்திரம் படைத்திருப்பதை அறிவோம். ஏனைய திணைப்பாடல்களை விடவும் மருதத் திணைப் பாடல்களில் இந்த ஏற்றத்தாழ்வுகள் அதிகமிருப்பதைக் காண்கிறோம். வயல் வேலைகளைச் செய்யும் உழைக்கும் மக்கள் ஒரு பிரிவாகவும், ஊரன், மகிழ்நன் என்று அழைக்கப்பட்ட வயலுக்கு உரிமை பூண்ட நில உடைமையாளர்கள் ஒரு பிரிவாகவும் வாழ்ந்து வந்துள்ளனர். அரசர்க்கும், செல்வந்தர்க்கும், படைத்தலைவர்களுக்கும் மணமாகிச் சென்ற பெண்கள் கர்ப்பமாக இருந்தபோதும், பிரசவமாகிக் குழந்தைக்குப் பாலூட்டிய போதும், மாதவிடாய் நாட்களிலும்

அவாகளுடைய கணவர்கள் தேர்பூட்டிச் சென்று பரத்தையர் சேரிகளில் கொட்டமடித்தார்கள். இதை அந்தப் பெண்களால் தட்டிக் கேட்க முடியவில்லை. "ஊர் சிரிக்கும், பழி தூற்றும்" என்று அவள் ஊரைக்காட்டி எச்சரிக்கை மட்டுமே செய்ய முடிந்தது.

சமுதாயத்தில் மேட்டுக்குடி மக்களிடத்தே பரத்தமை ஒழுக்கம் பரவலாகக் காணப்பட்டாலும் சான்றோர் இவ்வொழுக்கத்தை ஏற்றுக் கொள்ளவில்லை என்பது ஆறுதலுக்குரியது. அகத்திணை இயலில் பிரிவு பற்றிய செய்திகளைப் பத்து நூற்பாக்களில் தொகுத்துக் தருகிறார் தொல்காப்பியர் (தொல். 971, 980), அவற்றில் ஓதல், பகை, தூது, வழிபாடு, நாடுகாவல், பொருள் எனும் ஆறின் காரணமாகப் பிரிவுகளை மட்டுமே முதன்மையாக குறிப்பிடுகிறார் (Ganesaiyar, 2010). பரத்தையரின் பிரிவை முதன்மைப்படுத்தவில்லை. உலகம் முழுவதும் பரவியிருந்த இந்த பரத்தமைக்குப் போர்ச் சமூக அமைப்பும், ஒரதார மணமுறையும் காரணங்களாகச் சமூகவியல் அறிஞர்களால் கொள்ளப்படுகின்றன. இருந்த போதிலும் காதலை வற்புறுத்தும் தமிழ்ச் சமூக அமைப்பில், திருமணத்திற்கு முற்பட்ட ஆண். பேண் சந்திப்பில் சுதந்திரத்தை அனுமதித்த ஒரு சமுதாயத்தில் பரத்தமை ஏற்பட்டதற்கான காரணம், உண்டுகொழுத்த ஆண்களின் அளவிலாப் போக நுகர்ச்சிதான் என்பதை அறிய முடிகிறது.

## மருதப்பாடல்களில் மக்கட்பேறு

தொல்காப்பியரைப் போல, திருவள்ளுவரைப் போல மருதப் புலவர்களும் ஆண்குழந்தைகளையே முன்னிலைப்படுத்திப் பாடியிருப்பதை மருதப்பாடல்களில் காண்கிறோம். ஒருவருக்கு இம்மையிலும், மறுமையிலும் சிறப்பைத் தருவது மக்கட்பேறு மட்டும்தான் என்பதைப் பலரும் கூறக் கேட்டிருக்கிறோம். அகநானூறு 66 ஆம் பாடலில் பல நாட்களாகத் தலைவி சொல்லிக் கேட்காத தலைவன் பூப்போலும் கண்களையுடைய தன் புதல்வனின் தளர்பு நடையில் நெஞ்சைப் பறிகொடுத்தான். தன் எண்ணத்தை மாற்றிக்கொண்டு இல்லத்தில் தங்கினான் என்பதை அறிகிறோம்.

"ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்

சான்றோன் எனக்கேட்ட தாய்" (குறள். 69)

என வள்ளுவரும் ஆண்பாலை முன்னிலைப்படுத்துவதை அறிகிறோம். தந்தைக்கும் மகளுக்குமான பாசப் பிணைப்பினைக் காட்டும் ஓரிடத்தில் மட்டும் அகநானூற்றுப் பாடலில்

"நாண்கொள் நுன்கோலின் மீன்கொள் பாண்மகள்

தான்புனல் அடைகரைப் படுத்த வராஅல்

நாரரி நறவுண்டு இருந்த தந்தைக்கு

வஞ்சி விறகின் சுட்டு வாய் உறுக்கும்" (அகம். 216)

இந்த ஓரிடத்தில் மட்டும் பெண் குழந்தையின் சிறப்பு பேசப்படுகிறது. அதுவும் குழந்தை நிலையில் இல்லை சற்று வளர்ந்த நிலையில் 'பாண்மகள்' என்று கூறப்படுகிறது. கள் உண்டிருந்த தன் வயதான தந்தைக்கு தூண்டிலில் மீன் பிடித்து வஞ்சி விறகில் அதைச்சுட்டு உண்பிக்கிறாள் என பாச உணர்வினை வெளிப்படுத்துகிறார்.

## மருதநில மக்களின் பண்பாட்டுக் கூறுகள்

"பண்பாடு உடையவரைச் சான்றோர் என்றும், ஒழுக்கமுடையோhர் என்றும், மாசற்ற காட்சியுடையோர் என்றும் அழைத்தனர். உழவுத் தொழில் எவ்வாறு நிலத்தை பண்படுத்துகிறதோ அவ்வாறே மனத்தையும் மக்களையும் பண்படுத்துவது பண்பு. இச்சொல்லைத்தான் பண்டைய தமிழ் இலக்கியங்கள் பயன்படுத்தி உள்ளன. பண்பாடு என்றால் ஓர் இனத்தாரின் கொள்கைகள், கோட்பாடுகள், வாழ்க்கை முறைகள், உணவு, ஆடை, அணிகலன்கள், திருவிழாக்கள், விளையாட்டுகள், பொழுதுபோக்குகள் ஆகியவற்றைக் குறிக்கும். மருத நில மக்கள் நாள்தோறும் வயலில் நெல்

அறுவடை செய்து களத்தில் ஒப்படி செய்யப்படும் நெல் அளவினை மேற்பார்வை செய்பவரை 'கண்காணி' என்று அழைத்தனர். மருத நில மக்கள் தமக்காக உழைக்காமல் பிறருக்காகப் பெரும் முயற்சியுடன் உழைப்பவர்கள். குறிஞ்சியில் வில்லாளனாக இருந்தவர்கள், மருதத்தில் வியாபாரிகளாகவும் அரசுத் தொடர்பாளர்களாகவும் மாறுகின்றனர். அதேபோல் குறிஞ்சியின் வேலாளன் மருதத்தில் வேளாளன் ஆகிறான். இவன் முன்பு வேல் கொண்ட காவல் செய்தவன் ஆவார்.

மனிதர்களின் பரிணாம வளர்ச்சியில் குறிஞ்சி, முல்லை போன்ற காடுகளாக அல்லாது, நீர்நிலைகள் அதிகம் உள்ள இடமாக மருதம் இருந்தது. மருதநில வேளாளன் தன் நிலத்தின் மீதான பற்று காரணமாக தன் குழந்தைகளுக்கு மருதம்மா, மருதப்பிள்ளை போன்ற பெயர்களை காலம் காலமாக சூட்டி வந்தனர். இம்மையில் இல்லறத்தில் அறம் செய்து வாழ்பவர்கள் மறுமையில் தேவனாக பிறப்பது திண்ணம் ஆகும். இல்லறத்தை சிறப்பாக நடத்தும் வேளாளர்கள் மறுமையில் தேவலோகத்தில் தேவர்களாகத் தோன்றுவர் எனில் இம்மையிலும் வேந்தனாக அறவாழ்க்கை நடத்தினர். வேந்தர் வணக்கமுறை குமரிக் கண்டத்தில் தோன்றியது. வேந்தன் விழாவினை இறுதியாக நடத்தி வந்தவர்கள் புகார் சோழர்களே! பிற்காலத்தில் அதுவே இந்திர விழாவாக உருமாறியது.

அரசன் செங்கோல் ஆட்சி செய்தால் ஆண்டுதோறும் தப்பாது மழை பெய்யும் என்பது பண்டையர்களின் நம்பிக்கை. செங்கோல் ஆட்சியிலும் மழை பெய்யவில்லை என்றால் பயிர்கள் தீர்ந்து போய்விட்டால் இந்த ஊரில் வாழ்கின்ற கொடுமையான தீயவர்கள்தான் காரணம் என்று தீயவர்களைக் கட்டி இழுத்து கொண்டு வந்து எரிப்பது அந்நாளில் வழக்கமாக இருந்தது. குறிஞ்சி நிலத்திற்கு குறிஞ்சிப் பண்ணும், முல்லை நிலத்திற்கு சாதாரிப் பண்ணும், பாலை நிலத்திற்கு பஞ்சுரப் பண்ணும், நெய்தல் நிலத்திற்கு செவ்வழிப் பண்ணும், மருதநிலத்திற்கு மருதப் பண் என்று ஐந்து வகைப் பண்கள் இசைக்கப்பட்டன. போரில் புண்பட்ட வீரர்களை பேய்களிடமிருந்து காப்பாற்ற காஞ்சிப் பண் பாடப்பட்டதாக அகநானூறு கூறுகிறது.

## மருத நில மக்களின் வேளாண்மை உத்திகள்

மருத நில மக்கள் தங்களின் பொருளதார முன்னேற்றத்திற்கான வேளாண்மை பயிர்களில் நெல், கரும்பு முக்கியத்துவம் பெற்றன. செந்நெல், வெண்ணெல் போன்ற நெல் வகைகளும், வாழை, வெற்றிலைக்கொடி, உளுந்து போன்றவைகளும் அதிகமாக விளைவிக்கப்பட்டதை சங்க இலக்கியங்கள் வழி அறியலாம். உளுந்து போன்ற பயிர் வகைகள் ஊடு பயிர்களாக விளைவிக்கப்பட்டதை ஐங்குறுநூற்றுப் பாடல் வழி (ஐ-47:3) அறியலாம்.

"இயற்கை அனைத்தையும் வாரி வழங்கும் தாய்" என்று மருதநில மக்கள் கருதினர். நீர்நிலைகளின் கரையோரங்களில் பனங்கொட்டையை மூன்றடிக்கு மூன்று அடி இடைவெளி விட்டு நடவு செய்தனர். ஏனெனில் பனையானது சிறந்த காற்று தடுப்பானாகவும், நிலத்தடி நீர் மட்டம் குறையாமல் சேமித்து வைக்கும் தன்மை உடையது என்பதை அறிந்திருந்தனர். பனை மரத்திலிருந்து கிடைக்கும் பதநீர், நுங்கு, பனங்கற்கண்டு, கருப்பட்டி போன்ற பொருள்களின் மூலம் வருவாய் பெற்றனர். வைக்கோலின் உண்மையான மதிப்பை மருத நில மக்கள் அறிந்திருந்ததால் அறுவடை முடிந்த பிறகு வைக்கோலைச் சமமாக பரப்பி மடியச் செய்து மறுபருவம் வந்தவுடன் நிலத்தில் நீரைத் தேக்கி உரமாக செடி, கொடிகளை நிலத்திற்கு அளித்து வேளாண்மை உற்பத்தியை பெருக்கினர்.

மாட்டுச் சாணம், கோமியம் ஆகியவற்றைக் கலந்து வைக்கோலை மட்கச் செய்து 'தொழு உரம்' தயாரித்து பயன்படுத்தி வந்துள்ளனர். இதனால் உழவர்களின் நண்பன் என்று அழைக்கப்படும் மண்புழுக்களின் வேகமான உற்பத்தி அதிகரித்ததால் விளைச்சல் பன்மடங்கு அதிகரித்தது. நெல்லுக்கு ஊடுபயிராக உளுந்து உள்ளிட்ட பயிறு வகைகளை பயிரிட்டதால் நிலத்தின் நைட்ரஜன் உற்பத்தி ஏற்பட்டு இயற்கை உரமாக பயன்பட்டது. இரசாயனம் உரம் இல்லாத உற்பத்தி, பூச்சிக்கொல்லி தெளிக்கப்படாத பயிர் பாதுகாப்பு, ஒட்டு விதை இல்லாத உயர் விளைச்சல் உள்ளிடவற்றை தம் வேளாண் மந்திரங்களாகக் கொண்டிருந்தனர்.

இன்றைய பூச்சிக்கொல்லி, களைக்கொல்லிகளுக்கு மாற்றாக வேப்பங்கொட்டை, நொச்சி இலை, புங்கன், பிரண்டை, கற்றாழை உள்ளிட்ட எல்லாவற்றையும் இடித்து கோமியத்தில் ஊற வைத்து அதனை பூச்சிக்கொல்லியாகப் பயன்படுத்தினர்.

## முடிவுரை

ஐவகை திணைகளில் மனித வாழ்விற்கு அடிப்படையான உணவினை நிலையான ஓரிடத்தில் பயிரிட்டும், அதன் வழி நாகரீக மேம்பாடும், பண்பாட்டுக் கூறுகளும் தோன்றுவதற்கு இடமான மருத நிலத்தையும், அந்நிலத்தின் வரலாறு, அதன் சிறப்புகள் உள்ளிட்டவற்றை விளக்கி குடும்ப அமைப்புகள், மக்கட்பேறு, உணவு முறைகள், வேளாண் உத்திகள் உள்ளிட்ட வாழ்வியல் கூறுகளையும், மருதநில மக்களின் பண்பாட்டுக் கூறுகளையும் அறிய முடிந்ததிலிருந்து சமூகவியல் நோக்கில் சங்க கால மருத நில மக்களின் வாழ்வியல் முறைகளை அனைவரும் அறியலாம்.

## References

Avvai Duraisamy Pillai, S. (1968) Purananuru, Tirunelveli Thennindia Saiva Sithantha Noorpathippu Kazhagam, Chennai, India.

Ganesaiyar, (2010) Tholkappiyam Urai, International Institute of Tamil Studies, Chennai, India.

Parimanam, A.M., Balasubramaniyam, K.V., (2004) Kalithogai, New Century Book House Pvt Ltd, Chennai, India

Sadasiva Iyer, T. (1999) Ainkurunuru Source and text, International Institute of Tamil Studies, Chennai, India.

Venkatasamy Nattar, N.M (2012) Agananooru Moolamum Uraiyum, Saratha Pathippagam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License